**தம்புள்ள மாநகர சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நடைமுறையல்லாத சொத்துக்கள் கிரயத்தின் மீது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மோட்டார் மற்றும் வண்டில்கள் மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமான பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,255,178 ஆக இருந்த போதிலும், அது ரூபா 3,475,861 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் வருமானம் ரூபா 220,683 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணனி நிகழ்ச்சித் திட்டமொன்றை வடிவமைக்கும் செயற்திட்டத்திற்குரிய கடன் கொடுத்தோர் ரூபா 88,075 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கிந்தவெல்கொல்ல சிகிச்சை நிலையமொன்றையும் உடற்பயிற்சி நிலையமொன்றையும் நிர்மாணிக்கும் வேலைக்குரிய கடன்கொடுத்தோர் ரூபா 17,649 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பொது நிதியத்தின் கீழ் ரூபா 1,873,890 இற்கு நிறைவேற்றுவதற்கு மதிப்பீடு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்த நிர்மாண வேலையொன்று உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருக்கும் போது கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு 2017 ஆம் ஆண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 6,941,277 குறைத்து காண்பிக்கப்பட்டமையால்

அப்பெறுமானத்தினால் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் வட்டிச் செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 கழிவுப்பொருள் கை வண்டில்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 118,632 தொகை அக்கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 725,595 பெறுமதியான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையால் அப்பெறுமதியால் சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2017 ஆம் அண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,891,500 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அப்பெறுமானத்தால் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) கிடைக்க வேண்டிய கடை வாடகைக் கணக்கின் ஆரம்ப மீதியை சீராக்குவதற்காக அக்கடை வாடகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 3,898,569 ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்தமையால் அப்பெறுமானத்தால் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) ஆண்டின் வீதவரி வருமானம் ரூபா 4,054,361 ஆக இருந்த போதிலும் கணக்கின் பிரகாரம் அது ரூபா 5,132,766 ஆக காண்பிக்கப்பட்டமையால் வருமானம் ரூபா 1,078,405 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மக்கள் வங்கியின் 136-60-01-00005434-6 ஆம் இலக்க நிலையான வைப்பு கணக்கிற்குரிய ரூபா 1,875,000 வட்டித்தொகை கிடைக்க வேண்டியவ ட்டியாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதியால் ஆண்டின் வட்டி வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) தேசிய சேமிப்பு வங்கியின் 897291 ஆம் இலக்க நிலையான வைப்புக் கணக்கிற்குரிய வட்டி ரூபா 506,000 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) பிரதேச அபிவிருத்தி வங்கியின் 420031100209 மற்றும் 420034200009 ஆம் இலக்க நிலையான வைப்புக் கணக்குகளுக்கு முறையே கிடைத்திருந்த ரூபா 552,000 மற்றும் ரூபா 228,854 ஆன வட்டித்தொகை அக்கணக்குகளில் மீண்டும் முதலீடு செய்த போது கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாக பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 780,854 ஆல் கூடுதலாகவும் நிலையான வைப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) வாகனமொன்றின் பெறுமதி இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 1,500,000 ஆல் வாகனக் கணக்கு கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) மாநகர சபைக்குச் சொந்தமான 05 உழவு இயந்திர டேலர்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 460,000 ஆன 04 காணித் துண்டுகள் காணி கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கூ) கடன்கொடுத்தோர் ரூபா 14,850 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 51,689,570 கூட்டுத்தொகையான 7 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கு இடையே ரூபா 3,385,847 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

(i) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 31,596,697 தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 28,545,116 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கிடைக்க வேண்டியதாக இருந்தது.

(ii) நிலுவை வீத வரி ரூபா 6,431,416 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,057,874 தொகை முன்னைய ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வீதவரியாகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 115,522,731 ஆக இருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் மீதி ரூபா 107,242,206 ஆக இருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 21,278,292 ஆன 3 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தன.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** |
| --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நி.பி 110 | - | சேதங்கள் மற்றும் நட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நி.பி 138 மற்றும் 139 | 1,392,930 | கொடுப்பனவு உத்தியோகத்தர் எப்போதும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் மீது மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தாத உறுதிச் சீட்டுக்கள் பேரில் 10 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,392,930 ஆக இருந்தது. |
| (iii) | நி.பி 187 | 42,706 | கிடைத்த வருமானம் அத்திகதியில் வங்கியிலிடப்பட வேண்டிய போதிலும் கிடைத்த 1 ½ மாதத்திற்கு மேற்பட்ட காலமாக கடந்திருந்த காசோலை / காசுக் கட்டளை ரூபா 42,706 ஆக இருந்தது. |
| (iii) | நி.பி 342(1) | - | உப அடியிதழ் சேர் புத்தகங்கள் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் ஆவணப்படுத்தல் முறையாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) | VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | 35,655 | முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் விடுமுறை தின கடமைக்காக நகர சபை உத்தியோகத்தரொருவருக்கு 15 நாட்களுக்காக ரூபா 35,655 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவு | 19,016 | செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு உரித்தான உத்தியோகத்தரிடமிருந்து வீட்டு வாடகையாக ரூபா 19,016 அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக் | 39,200 | கைவிரலடையாளம் பதியும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்துவது தொடர்பான அறிக்கை பெறப்பட்டு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 38,518,978 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 124,471,849 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மக்கள் வங்கியின் 05 நிலையான வைப்புக்களுக்காக வருடாந்த வட்டி 12% கிடைக்கையில் ரூபா 15,000,000 தொகையான நிலையான வைப்பிற்கு மாத்திரம் 11% வீதப்படி அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டொன்றுக்கு ரூபா 150,000 அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியின் 2-0103-01-99630 ஆம் இலக்க நிலையான வைப்பிற்குரியதாக கிடைத்திருந்த ரூபா 550,000 ஆன வட்டியின் பேரில் 8% நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருந்ததுடன் இவ்வாறு வரியாக அறவிடுவதற்கு காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 14,220,000 | 12,288,549 | 9,915,007 | 2,373,542 | 12,650,000 | 11,276,178 | 6,541,381 | 1,734,797 |
| வாடகை | 14,830,000 | 10,919,569 | 8,996,560 | 1,923,009 | 14,330,500 | 12,788,125 | 11,549,442 | 1,238,683 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 14,681,000 | 7,621,906 | 6,455,992 | 1,165,914 | 7,991,000 | 7,221,167 | 6,029,067 | 1,192,100 |
| ஏனைய வருமானம் | 36,480,500 | 50,736,413 | 36,918,635 | 13,817,778 | 27,697,000 | 38,846,274 | 22,501,991 | 16,344,283 |
| | 80,211,500 | 81,566,437 | 62,286,194 | 19,280,243 | 62,668,500 | 70,131,744 | 46,621,881 | 20,509,863 |

**2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவை வருமானம் ரூபா 19,280,243 ஆக இருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 23 சதவீதமாக இருந்தது.

**2.3.3 வீதவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வீதவரி மீதி ரூபா 4,054,361 ஆக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டினுள் ரூபா 1,680,819 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் பெறவேண்டிய வீதவரி வருமானம் ரூபா 6,431,416 ஆக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதி வரையில் பெறவேண்டிய வீதவரி வருமானம் ரூபா 5,550,673 ஆக இருந்ததுடன், அதற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவை வருமானம் ரூபா 880,743 ஆல் அதிகரித்திருந்தது.

**2.3.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பேரூந்து நிறுத்துமிட கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 15,836,822 ஆக இருந்ததுடன் 20 கடைகள் மூடப்பட்டிருந்தன.

(ஆ) மொத்த சந்தை கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 492,067 அறவிடப்பட்ட வேண்டியிருந்ததுடன் அதில் 46 கடைகள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்தன.

(இ) விளையாட்டரங்கினை வாடகைக்கு வழங்கும் போது சபையினால் தீர்மானிக்கப்பட்ட விலையை விட குறைவாக வாடகைக்கு வழங்கியதால் ரூபா 57,500 ஆக நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இனங்காணப்பட்ட வியாபார நிலையங்களிலிருந்து பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 295,400 ஆக இருந்தது.

(ஆ) சுற்றுலா சபையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஹொட்டல்களிலிருந்து அறவிடப்பட்ட வேண்டிய 1% இற்கு மேற்படாத வியாபார வரி அறவிடும் போது உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு பரீட்சிக்கப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைக்குரிய தீயணைக்கும் பிரிவினால் 2017 ஆம் ஆண்டில் 26 தீயணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதி வரையிலும் 22 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 151,053 அறவிடப்பட்டிருக்கவில்லை

(ஆ) சபை அதிகாரப்பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 350 முச்சக்கர வண்டிகளில் 349 இல் இருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாமல் இருந்ததுடன் அதன் பெறுமதி 322,180 ஆக இருந்தன.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப்பணமும்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 3,496,553 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் (252 ஆம் பிரிவு) 267 ஆவது பிரிவின் பிரகாரம் மாநகர சபைக்கு கிடைத்துள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அக்கட்டளைச் சட்டத்தின் 272(32) உப பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் நிறுத்தி வைக்குமிடத்திலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காக உப விதிகளை தயாரித்து செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

2017 ஆம் ஆண்டின் கவஷமா செயற்திட்டத்தின் கீழ் திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்டகால வேலைத்திட்டத்திற்காக நிதிஏற்பாடு கிடைத்திருந்ததுடன் வனப் பரிபாலன திணைக்களத்திற்குரிய திகம்பதன பிரதேசத்தில் காணியின் ஒரு பகுதி செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்தது. தற்போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையால் அக்காணிக்கு அண்மித்த பிரதேசத்தில் கழிவுப் பொருட்கள் ஆங்காங்கே இடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### (இ) சுற்றாடல் சிக்கல்கள்

திகம்பதன பிரதேசத்திற்கு வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்களுடன் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து அகற்றப்படும் மரக்கறிகள், பழங்களுடன் பொலித்தீன் கலந்துள்ளதுடன் அவற்றை காட்டு யானைகள் மற்றும் ஏனைய மிருகங்கள் உட்கொள்வதால் அவ்விலங்குகளின் உயிர்களுக்கு ஆபத்தொன்று காணப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான மாநகர சபை அறிந்திருந்ததுடன் அதற்காக 2017 ஆம் ஆண்டிற்கான ரூபா 12,502,000 நிதிஏற்பாட்டில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக ரூபா 7,323,421 செலவிடப்படடிருந்தது. அதில் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக தம்புலுகம தேசிய உணவகம் ஒன்றை நிர்மாணித்தல் மற்றம் கிராமிய விவசாய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில் கழிவுப்பொருள் அற்ற நகரமொன்றை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்த திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் மற்றும் நோயற்ற சமுதாயமொன்றை உருவாக்கும் நோக்கில் சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் தேவையான இலக்குகள் இனங்காணப்படவில்லை. இதற்காக முகாமைத்துவ மேற்பார்வையின் கீழ் அனுபவமுள்ள 06 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்காக மும்மாத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தம்புள்ள விஷேட பொருளாதார நிலையத்தின் வடிகான் முறைமையை அமைப்பதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 52,640 தொகை ஓராண்டு கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளையாட்டரங்கினை வாடகைக்கு வழங்குதல் மற்றும் நீர் பௌசரை வாடகைக்கு வழங்கும் விண்ணப்பங்களுக்காக பரிந்துரை மற்றும் அங்கீகாரமொன்று இல்லாமல் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 05 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபையின் பதவியணியினரில் 69 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு விண்ணப்பத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் 50% பங்களிப்பின் கீழ் ரூபா 617,227 பெறுமதியான 200 குப்பை தொட்டிகள் 2016 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு கிடைத்திருந்ததுடன் அதில் 86 தொட்டிகள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய தொட்டிகள் தொடர்பாகவும் இதற்கு முன்னர் காணப்பட்ட தொட்டிகளின் அளவு தொடர்பாகவும் இருப்பு புத்தகங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொத்த சந்தை கடைகளை குத்தகைக்கு வழங்குதல் தம்புள்ள பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தம்புள்ள மாநகர சபை கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர்

அக்கடைகளின் உடன்படிக்கைகள' மற்றும் கோவைகள் கையளிக்கப்படாமை காரணமாக உடன்படிக்கை இல்லாத 689 கேகாவைகள் காணப்பட்டன.

### 3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

தம்புள்ள பிரதேச சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து முறையே 1995 மே 06 ஆந் திகதி முதல் பழைய மொத்த சந்தை நிர்மாணத்திற்காக ரூபா 12,000,000 தொகை மற்றும் 2005 செப்தெம்பர் 30 ஆந் திகதி தம்புள்ள பேருந்து நிலைய வர்த்தக தொகுதி நிர்மாணத்திற்காக ரூபா 106,859,260 தொகையொன்றாக கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தம்புள்ள மாநகர சபை 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி கூட்டிணைக்கும் போது மேற்குறித்த கடன்தொகை தம்புள்ள மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. தம்புள்ள மாநகர சபைக்கு கடன் கொடுப்பனவினை கையளிக்கும் போது உரிய உடன்படிக்கைகள் ம்ற்றும் கோவைகள் கையளிக்கப்படாமையால் தம்புள்ள மாநகர சபையால் கடன் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 2018 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் கடன் தொகையை மிகைத்து வட்டி அதிகரித்திருந்தது. இதன் காரணமாக தம்புள்ள மொத்த சந்தைக்காக ரூபா 38,569,308 தொகை மற்றும் தம்புள்ள பேருந்து நிலைய மற்றும் வியாபார தொகுதி நிர்மாணத்திற்காக ரூபா 223,308,146 தொகையுமாக கடன் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.6.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்ற 04 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜீப் வண்டியொன்று மாநகர சபைக்கு கிடைத்து 4 ½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கையேற்பதற்கு நடவடிக்க எடுக்கப்படாதிருந்ததுடன் 2017 மே 19 ஆந் திகதிய CPC/DMC/1/6/33 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இவ்வண்டியை மீண்டும் பிரதம செயலாளருக்கு கையளிக்க பிரதம செயலாளரினால் அறிவித்திருக்கையில் 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதி நகர ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் ரூபா 460,390 ஆன மதிப்பீட்டில் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது

#### 3.6.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2015 மார்ச் 26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'e' நெனச இல்ல கணனி பயிற்சி நிலையம் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் இதுரை இதற்காக 2 ½ ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 455,575 பெறுமதியான சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன. அதற்காக வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இணைப்பிற்காக 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை செயற்படாத காலத்திற்காக ரூபா 27,406 தொலைபேசிக் கட்டணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிந்தவெல்கொல்ல சிகிச்சை நிலையமொன்றையும் உடற்பயிற்சி நிலையமொன்றையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 980,000 செலவு செய்து 2014 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தனியார் காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த

இக்கட்டிடம் மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்கு கையளிக்கப்படாமையால் 03 ஆண்டு காலமாக அக்கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டது.

### 3.6.3 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ விடுதி சொத்துக்கள் தொடர்பாக அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.4 வாகனப் பயன்பாடு

JCB இயந்திரமொன்று 2017 யூன் 29 ஆந் விபத்திற்குட்பட்டு ரூபா 111,970 ஆன சேதமொன்று இடம்பெற்றிருந்ததுடன் 2018 சனவரி 15 ஆந் திகதி வரை சேதங்கள் ஏற்பட்டு 6 மாதங்கள் கடந்திருந்த போதிலும் காப்புறுதி உரித்திகனை பெற்றுக் கொடுப்பதற்கும் வாகனத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலை மதிப்பீடு தயாரிக்கும் போது பௌதீக அலகுகள் அவதானிக்கப்பட்டு அதன் பிரகாரம் அளவீட்டு பத்திரம் தயாரிக்கப்படாமையால் வேலை உருப்படிகள் மதிப்பீட்டு அளவினை மிகைத்து செய்த வேலை அளவு அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் மூன்று வேலைகள் ரூபா 83,871 குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட பொஹொரன்வெவ கப்புவத்த வீதி அபிவிருத்தி உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கையளிக்கப்படாமையால் ரூபா 9,897 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) திகம்பதன கழிவுப்பொருள் சுவர் நிர்மாணத்திற்காக ரூபா 3,300,570 தொகையான பெறுமதிக்கு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருட்களை தள்ளுவதற்கு ஒரு கனமீற்றருக்கு ரூபா 110 வீதம் 24280 கனமீற்றருக்காக ரூபா 2,685,253 தொகை கழிவுப்பொருள் விழுமிடத்தை அமைப்பதற்கும் மட்டப்படுத்துவதற்கும் 100 இயந்திர மணித்தியாலத்திற்காக ரூபா 4,500 வீதமான ரூபா 450,000 உம் 915 மில்லிமீற்றர் விட்டமுடைய ஹியும் குழாய் வழங்கி பொருத்துவதற்காக ரூபா 100,000 தொகை மற்றும் நிர்வாக செலவினமான ரூபா 64,717 தொகை என்பன இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக இயந்திர மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டு 606 மணித்தியாலங்களுக்காக ரூபா 2,669,040 தொகை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அளவீட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1(அ) பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் உள்ளடக்கப்பட்டு விதந்துரைகள் குறிப்பிடப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை.

(iii) கூறுவிலை கோரும் ஆவணங்களின் பிரகாரம் கூறுவிலை பதிவுத் தபாலில் அல்லது கையில் கொண்டு வந்து கையளிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சதாதாரண தபால் மூலம் கிடைத்த கூறுவிலைகளும் கேள்வி மதிப்பீட்டின் போது கருத்திற் கொள்ளப்பட்டிருந்ததுடன் கூறுவிலை கிடைத்த கடிதங்களின் உரைகளில் அலுவலக திகதி முத்திரை இடப்படாமையால் கேள்வி நிர்ணயிக்கபட்ட திகதிய வைக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை..

(iv) பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6(ஆ) பிரகாரம் கேள்வி திறத்தல் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் சமூகமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை

(v) பெறுகை குழுவினால் இயந்திர மணித்தியாலத்திற்கு ரூபா 3,800 ஆன ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்திருந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீண்டும் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கியுடன் ரூபா 4,400 தொகைக்கு இயந்திரத்தினை வழங்க முடியுமென அக்கேள்விதாரர் சமர்ப்பித்த நிபந்தனையின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vi) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 எ இன் பிரகாரம் செயலாற்றல் பாதுகாப்பு பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 8.9.1(அ) பிரிவின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கழிவுப்பொருள் வெளியேற்றம் இடத்தை சுற்றி யானை வேலி அமைக்கும் நிர்மாண வேலையை மேற்கொள்வதற்காக ஒப்பந்த விலை கோரி குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு ரூபா 1,280,000 இற்கு வழங்குவதற்கு 2018 சனவரி 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட முகாமைத்துவ குழுவின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு யானை வேலி நிர்மாணிப்பதற்கு வன சீவராசிகள் பணிப்பாளர் 2017 திசெம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விதந்துரைகள் வழங்கப்படிருந்தது. அவ்வாறு அனுமதி மற்றும் தேவையான விதந்துரைகளை வழங்குவதற்கு முன்னர் 2017 நவம்பர் 29 ஆந் திகதி இந்த ஒப்பந்தத்திற்காக மாநகர சபையினால் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 இன் பிரகாரம் உயர்தரத்திலான நடவடிக்கையொன்றுக்கு புறம்பாக உரிய விதந்துரைகள் இல்லாமல் கூறுவிலை கோரப்பட்டிருள்ளதாக அவதானிக்கப்பட்டன.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.12.2 இன் பிரகாரம் கேள்விதாரரின் தொடர்பான முன்னைய ஒப்பந்தங்கள் தொடர்பாக முன்னைய செயலாற்றல் அல்லது உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடுகள் வெற்றிகரமாக நிலைவேற்றுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக முன்தகைமை பரிசோதனையொன்று செய்யப்பட்ட வேண்டிய போதிலும் நிறுவனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அக்கோவையின் 8.9.1 இன் பிரகாரம் இந்த ஒப்பந்தம் தொடர்பான முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றுக்கு வருவதற்கும் 5.4.8 இன் பிரகாரம் செயலாற்றல் பிணை முறிகள் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(iii) மின்சார வேலி அமைப்பதற்கு உரிய இடப்பரிசோதனையின் பிரகாரம் மின்சார வேலியின் தூண்களுக்கு இடையே இடைவேளி 15 மீற்றர் ஆக இருக்க வேண்டிய போதிலும் அதிகமான இடங்களீல் அதனை விட கூடிய இடைவெளி

காணப்பட்டதுடன் மின்சார ஸ்பிரிங் நுழைவாயில் 4 மீற்றர் நீளமானதென இனங்கப்பட்டிருந்த போதிலும் நுழைவாயில் நீளம் 4.25 மீற்றர் மற்றும் 5.8 மீற்றராக இருந்தன. அவ்வாறே பொருத்தப்பட்டிருந்த மின் உப பாகங்கள் உரிய தரம் வாய்ந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கு உத்தரவாதச் சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கபட்படிருக்கவில்லை.

(iv) மின்சார வேலியின் பௌதீக ரீதியாக நிலைவேற்றப்படாத 45.85 மீற்றர் நிர்மாணத்திற்காக ரூபா 35,763 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) கழிவுப் பொருள் சுழற்சி செயற்திட்டத்திற்காக ரூபா 905,975 பெறுமதியான மணி இயந்திரமொன்றை கொள்வனவு செய்யக்கூடிய பெறுகையின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1 (அ) பிரகாரம் தேவையான இயந்திரத்தின் விதந்துரைகள் தேவையான அளவிற்கு விபரமாக்கப்பட்டு விலை கோரப்படாதிருந்ததுடன் வழங்குனர் தெரிவின் போது விதந்துரைகளை மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக கூறுவிலை மதிப்பீடு மாத்திரம் இடம் பெற்றிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.12 இன் பிரகாரம் கேள்விதாரரின் முன்தொகையை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் மலக்கழிவுகளை வெளியேற்றுவதற்காக கலி குழியொன்று நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிறுவனமொன்றின் மூலம் நிர்மான வேலையை நிறைவேற்றி பட்டியல் அல்லது வேலை முடிவு அறிக்கையோ மேற்கொள்ளாமல் நிர்மாணத்திற்காக 67.2 இயந்திர மணித்தியாலத்திற்காக ரூபா 302,400 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் நேர் உழைப்பு முறைமை அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணம் தெரிவு பரிசோதனையின் வழங்கப்பட்டிருந்த பொருள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த சீமெந்து அளவினை விட அதற்காக உள்ளவாறான பயன்படுத்தப்பட்ட சீமெந்து அளவு வேறுபட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்காக பயன்படுத்திய சீமெந்துகளை விட களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்ட சீமெந்து அளவு அதிகமாக இருந்தமையால் 02 நிர்மாணங்களுக்காக ரூபா 32,485 பெறுமதியான 13½ மூடை சீமெந்து வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) 86 செலவின விடயங்கள் மற்றும் உப விடயங்ளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,233,000 ஆன கூட்டுப்பெறுமதியான நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) 94 செலவின விடயங்கள் மற்றும் உப விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளவாறான விடயங்களுக்கு இடையே 27% முதல் 99% வரையான வீச்சில் விலகல் காணப்பட்டதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் 04 கணக்காய்வு விசாரணைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இக் கணக்காய்வு விசாரணைகளின் பிரதிகள் நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்கள பணிப்பாளரின் சுற்றறிக்கை பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்கள பணிப்பாளரின் சுற்றறிக்கை மற்றும் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் ஆண்டொன்றில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## 4.4 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டில் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட 14 கணக்காய்வு விளாக்களுக்காக பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை இந்த வினாக்களுக்கு உள்ளடக்ககூடிய கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 57,276,519 ஆக இருந்தன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின்/ தலைவரின்/ செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) களஞ்சியக் கட்டுப்பாடு | i | களஞ்சிய பெறுவனவுகள் மற்றும் வழங்கல் முறைப்படி பதிவுசெய்யப்படாமை |
| | ii | 110 கொடிக் கம்பங்கள் மற்றும் 200 கொப்போஸ்ட் தொட்டிகள் இருப்பு பதிவேட்டில் பதிவுசெய்யாமை. |
| | iii | ஆயுர்வேத மருத்துவ நிலையத்திடமிருந்து கிடைத்த இருப்புக்கள் களஞ்சிய பதிவேகளில் பதிவுசெய்யப்படாமை, வழங்கல் எதுவும் |

| | | | |
|---|---|---|---|
| | | | நாளதுவரையாக்காமை மற்றும் காலாவதியான மருந்துகளை களஞ்சியத்திலருந்து அகற்றாமை |
| (ஆ) | கொள்வனவுகள் | i | பெறுகை தீர்மானம் பதிவுசெய்தலில் பூரணமின்மை, தேவையான விதந்துரைகள் குறிப்பிடப்படாமல் கூறுவிலை கோரல், பெறுகை தீர்மானத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடமிருந்து கூடிய விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்தல், திகதி இல்லாத கூறுவிலை கூடுதாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை. |
| | | ii | வெளித்தரப்பினரிடமிருந்து நிறுவனத்திற்கு கிடைக்கு கடிதங்களில் தின முத்திரை இடப்பட்டு திகதியை உறுதிப்படுத்தாமை.ாதுகாப்பினை ஸ்தாபிப்பதற்கு தவறியமை. |
| (இ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | i | நிலையான சொத்துக்கள் முறையாக பேணப்படாமை. |
| | | ii | சபைக்குச் சொந்தமாக காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காணப்படாமைமுறையற்ற இருப்புக்கள் கட்டுப்பாடு |
| | | iii | சபைக்குச் சொந்தமாகவுள்ள சில வாகனங்களின் பதிவுச்சன்றிதழ் காணப்படாமை. |
| | | iv | மாநகர சபைக்கு கிடைத்த சொத்துக்கள் சபையின் பெயரில் கையேற்கப்படாமை |
| (ஈ) | கணக்கீடு | i | காணி மற்றும் வாகனங்கள் கருத்தில் கொள்ளக்கூடியளவில்கணக்குகளுக்கு உள்ளடக்கப்படாமை |
| | | ii | கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த வருமானம் சரியாக தலைப்புகளுக்கு இடாமை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணை சமப்படுத்தாமை. |
| | | iii | பேரேட்டுக் கணக்குகள் முறையாக் முறைப்படி பேணப்படாமை மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் இடும்போது கணக்குகள் சரியாக இனங்காணப்படாமை |